# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 10 வியாழக்கிழமை 23.05.2024 கதிர் 265



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# ஜனாதிபதி ரணில் நாளை வடக்குக்கு விஜயம்! 3 நாட்கள் தங்கி, பல நிகழ்வுகளில் பங்கேற்பார்

## அரசியல் சந்திப்புக்கள் திட்டமிடலில் இல்லையாம்



**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக நாளை வெள்ளிக்கிழமை வடக்குக்கு விஜயம் செய்யவுள்ளார்.**

**3 நாட்கள் விஜயமாக வடக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் உரித்து தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் காணி உரிமங்களை வழங்கி வைக்கவுள்ளார்.**

**அத்தோடு வடக்கில் இளைஞர்களுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பொன்றிலும் கலந்துகொள்ளவுள்ளார்.**

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் பயிற்சி பிரிவொன்றையும் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார்.**

2➤

## இயற்கையின் சீற்றம்: 40 ஆயிரம் பேர் பாதிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் நால்வர் பலியாகியுள்ளனர். மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

18 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 8 ஆயிரத்து 944 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

3 வீடுகள் முழுமையாகவும் 973 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

சீரற்ற காலநிலையால் புத்தளம் மாவட்டத்திலேயே பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளது. (அ)

## அனுரகுமாரவிற்கு சாதகமான சூழலை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் மறைமுகமாக உதவுகின்றார்!

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு



நடைபெறவுள்ள தேர்தலில் தேசிய மக்கள்சக்தியின்தலைவர்அனுரகுமார திசாநாயக்கவிற்கு சாதகமனான சூழலொன்றை ஏற்படுத்திக்கொடுப்பதில் மறைமுகமான முறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்ஹ முயற்சி செய்கின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் அனுரகுமார திசாநாயக்கவுக்கும் இடையில் கடந்த காலங்களில் சிறந்த உறவு இருந்ததாகவும், மே தின பேரணிகளை ஒழுங்கமைக்கும்போது அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் அது தெளிவாக வெளிப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மே தினக் கூட்டத்தை நடத்துவதற்கு அநுரகுமார திசாநாயக்க கோரிய இடத்தை அரசாங்கம் வழங்கியதாகவும், ஆனால் அதே இடத்தை முன்கூட்டியே கேட்டிருந்த ஐக்கிய மக்கள் சக்திக்கு அதனை வழங்காமல் அரசாங்கம் தமது கட்சிக்கு அநீதி

2➤

## காற்றாலை மின்சார உற்பத்திக்கு மன்னார் பொருத்தமான இடமல்ல!

### சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



காற்றாலை மின் உற்பத்திக்கு மன்னார் பொருத்தமான பிரதேசம் இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் ஏற்பாடு செய்த விசேட கூட்டம் இன்று காலை மன்னாரில் இடம் பெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"காற்றாலை மின்சாரத் திட்டம் அமைக்கலாம். ஆனால் ,அதற்கான உகந்த இடங்களை தெரிவு செய்து முன்னெடுக்க வேண்டும்.

மன்னார்த் தீவு என்பது கடல் மட்டத்தில் இருந்து சற்று உயரம் குறைவான இடத்தில் காணப்படுகின்றது. இத்தீவு இச்செயல் திட்டத்திற்கு பொருத்தமானதாக இல்லை.

மன்னாரில் இரண்டு பாரிய அச்சுறுத்தல்களை மக்கள் எதிர் கொள்கின்றார்கள். காற்றாலை அமைக்கப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் செயல் திட்டத்தில் மூன்று திட்டங்கள் உள்ளதாக்க் கூறப்படுகிறது.

காற்றாலை அமைப்பதன் மூலம் இப்பிரதேசங்களில் எற்படுகின்ற பல விதமான பாதிப்புக்களை மக்கள் ஏற்கனவே நேரடியாக அனுபவிக்கின்றார்கள்.

குறிப்பாக, மீன்பிடிச் சமூகம் அவர்கள் பிடிக்கும் மீன்களின் தொகைகளில் மாற்றம் காணப்பட்டு குறைகின்றமை. நீரோட்டங்களின் திசைகள் வழமை போல் இல்லாது மாற்றமடைவது உள்ளடங்கலாக பல்வேறு காரணிகளால் பிடிக்கப்படுகிற மீன்களின் தொகை பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது.

குறிப்பாக கரைவலை மீன்பிடி சம்பந்தமான முறையில் பாரிய அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதை வைத்தும், வேறு பல விஷயங்களை வைத்தும் காற்றாலையினை அமைப்பது மன்னார் தீவுக்கு பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது புலனாகின்றது.

எனவே, இவ்விடயங்களை உடனடியாக கவனத்தில் எடுப்போம். ஏற்கனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு

2➤

## மழையினால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் மின் கட்டணத்தைக் குறைக்க உடனடியாக நடவடிக்கை எடுங்கள்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை



தற்போது பெய்து வரும் கடும் மழையினால் நீர் மின் நிலையங்களை நம்பியுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மிகவும் உயர்வடைந்துள்ள நிலையில், மின்சார கட்டணத்தை விரைவில் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு மின்சாரத்துறை அமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் விசேட கோரிக்கையொன்றை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில் "மின்சாரத்துறை அமைச்சர் இந்த சபையில் இருக்கும் தருணத்தில், குறிப்பாக நாட்டில் அதிக மழை பெய்யும் போது, நீர்மின் நிலையங்களை நம்பியுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மிகவும் உயர் மட்டத்தை எட்டியுள்ளது. இதன்படி காசல்ரீ, மவுஸ்சாகலை, கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல, சமனல வெவ போன்ற நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மிக உயர் மட்டத்தை எட்டியுள்ளது.

இத்தொகை 15 மற்றும்

2➤

# ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்றன



ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் இறுதிக்கிரியைகள் இன்று ஈரானின் தெற்கு கொரசான் மாகாணத்தின் தலைநகரான பிரிஜெண்ட் நகரில் நடைபெற்றன.

இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த ஜனாதிபதியின் புகைப்படங்களை ஏந்தியவாறு நீண்ட வரிசையில் மக்கள் அணிவகுத்து, பேரணியில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர். இதில் கலந்து கொண்டவர்கள் கறுப்பு நிறத்திலான உடையணிந்து துக்கத்தினை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் இந்த இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தபோதும் ஈரானில் இடம்பெறும் ஏனைய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் மக்கள் எண்ணிக்கையை விட குறைவாக மக்களே இதில் கலந்து கொண்டதாக சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப், ஆர்மேனிய பிரதமர் நிகோல் பஷினியன், ஈராக் பிரதமர் முகமது ஷியா அல்-சூடானி மற்றும் வெளியுறவு அமைச்சர் அமீர் கான் முடாக்கி தலைமையிலான ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்களின் தூதுக்குழு உட்பட பல வெளிநாட்டு பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டனர்.

எனினும் மேற்கத்திய தலைவர்கள் எவரும் இதில் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் மறைந்த ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிரப்டோலாஹியன் மற்றும் 6 பேர் ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்திருந்தனர்.

குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்று நான்கு நாட்களுக்குப் பின்னர் இன்று புனித நகரமான மஷாத் நகரில் மறைந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. (04)

## காற்றலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைப்பு ஒன்று நீதிமன்றத்தை நாடியுள்ளது.

இதனடிப்படையில் மன்னாரில் இருந்து மக்கள் சார்பாகவும் இவ்வாறான ஒரு செயல் திட்டத்தை அவர்களுடன் இணைந்து முன்னெடுப்பதற்கு நாங்கள் எதிர்வரும் வாரத்தில் நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளோம்" எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்தார்.

## அநுரகுமார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இழைத்ததாகவும் குறிப்பிட்ட முஜிபுர் ரஹ்மான் எம்.பி., அனுரகுமார திசாநாயக்கவுக்கு ஜனாதிபதி உதவி செய்கின்றார் எனவும் ஆனால், ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெம-88)

## ஜனாதிபதி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, கிளிநொச்சி வைத்தியசாலையில் பெண்கள் சுகாதாரப் பிரிவொன்றும் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் இதய நோய் பிரிவும், மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் புதிய விடுதியொன்றும் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்படவுள்ளது. இவை தவிர யாழ்ப்பாணத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்விலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

இவ்வாறு 10 முக்கிய நிகழ்வுகளில் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். அது மாத்திரமின்றி வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் இந்த விஜயத்தின்போது விசேட அவதானம் செலுத்தப்படவுள்ளது. எவ்வாறிருப்பினும் அரசியல் ரீதியான சந்திப்புக்கள் எவையும் திட்டமிடப்படவில்லை எனத் தெரியவருகின்றது. (அ)

## மழையினால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

20 சதவீதத்தில் இருந்து 31 சதவீதமாக அதிகரித்துள்ளது. இவ்வாறானதொரு தருணத்தில் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதற்கான யோசனைகளை சமர்ப்பிக்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இரண்டு தடவைகள் சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஆனால், அதற்கான முன்மொழிவுகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, நீர் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதால் அந்த நன்மையை மின் நுகர்வோருக்கு விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இந்த சந்தர்ப்பத்தில் மின்சாரத்துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்" என்றார். (ரெம-89)

# சிவப்பு அறிவித்தல் விடுப்பு!

பலத்த காற்று மழை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு அறிவித்தலை விடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் தென்மேற்குப் பருவமழை காரணமாக மழை மற்றும் காற்றின் தீவிர நிலைமை தொடர்ந்து அதிகரிக்கும் என அந்தத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதிய அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டத்திலும் சில இடங்களில் 150 மில்லி மீற்றர் அளவிலான கனமழை பெய்யக்கூடும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், மேல், வடமேல் மாகாணங்களிலும் மன்னார், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (04)

# லங்கா பிரீமியர் லீக் 2024 திட்டமிட்டபடி நடக்கும்!

எதிர்வரும் லங்கா பிரீமியர் லீக் (எல்பிஎல்) போட்டிகளை திட்டமிட்டபடி நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அந்த சுற்றுத்தொடரின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

தம்புள்ளை தண்டர்ஸ் அணியின் அனுமதி நேற்று (22) உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன்,

எதிர்காலத்தில் அதன் உரிமையில் மாற்றத்துடன் போட்டிகள் நடத்தப்படும் எனவும் குறித்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்பிஎல் போட்டியின் நேர்மை மற்றும் தரத்தை பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் ஆட்ட நிர்ணயத்தை முன்மொழிய முயற்சித்த தம்புள்ளை தண்டர்ஸ் அணியின் உரிமையாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான தமீம் ரஹ்மானை மே 31 வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டிருந்தது.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா முன்னாயத்த ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடல்




யாழ்ப்பாணம் - நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் மாவட்ட பதில் அரசாங்க மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்றையதினம் (21) மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழா எதிர்வரும் ஜுன் 7 ஆம் திகதி தொடக்கம் 22 வரை நடைபெறவுள்ளது. எனவே, அனைத்து பக்தர்களும் எந்தவித இடையூறும் இல்லாமல் அம்பாளை தரிசிப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் திருவிழாக் காலங்களில் வழமைபோல் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து குறிகாட்டுவான் வரையிலான இலங்கைப் போக்குவரத்துச் சேவை மற்றும் தனியார் பஸ் சேவைகளின் ஒருவழிக் கட்டணம் 187 ஷரூபா எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை குறிகாட்டுவானில் இருந்து ஆலயம் செல்வதற்கான படகுப் போக்குவரத்து ஒரு வழிக் கட்டணம் 80 ஷரூபாய் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

அத்தோடு, கடற்போக்குவரத்து நேரத்திற்கமைய தனியார் போக்குவரத்து மற்றும் இலங்கைப் போக்குவரத்துப் பேருந்து சேவைகள் காலை 6 மணி தொடக்கம் மாலை 7.30 மணிவரையில் நடைபெறவுள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டது.

கடற்போக்குவரத்தில் ஈடுபடும் படகு உரிமையாளர்கள், படகுகளை உரிய முறையில் பேணுவதுடன், படகில் ஏற்றிச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துதல் மற்றும் பயணிகளுக்குரிய வசதிகள் இல்லாத படகுகளை சேவையில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கள் விற்பனை நிலையம், திருவிழாக்காலத்தில் பூட்டப்படுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் திருடர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த பொலிஸ் உத்தியோகத்தர்களை பாதுகாப்பில் ஈடுபடுத்துவதோடு, வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த பிரதேச சபையினால் அடையாள அட்டைகள் வழங்கப்படுதல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டது.

அத்தோடு குறிகாட்டுவான் வீதி குன்றும் குழியுமாக உள்ளமையினால் அதனைச் சீர்செய்வது தொடர்பாகவும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, பொலிஸ் பாதுகாப்பு, கடற்போக்குவரத்தில் பாதுகாப்பு அங்கிகளை அணிவதை உறுதிப்படுத்தல், பாடசாலை மாணவர்களின் சாரணர் தொண்டர் சேவை, தரை மற்றும் கடற்போக்குவரத்து நேர அட்டவணையைக் காட்சிப்படுத்தல், மின் இணைப்புகள், யாசகம் பெறுவோர் உள்வருவதைக் கட்டுப்படுத்தல், நடமாடும் வைத்திய சேவை, சுகாதாரம் மற்றும் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்தல், அமுதசுரபி அன்னதான ஒழுங்குகள், அம்புலன்ஸ் சேவை மற்றும் புனரமைக்கவேண்டிய வீதிகள் உள்ளிட்ட விடயங்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகன், உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி, யாழ்ப்பாணப் பிராந்திய வைத்திய அதிகாரி உ.கேதீஸ்வரன், நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பரமலிங்கம் மற்றும் வேலணைப் பிரதேச செயலாளர், சுகாதாரத் துறைசார் பங்குதாரர்கள், இலங்கைப் போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர்கள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் தரப்பினர், பிரதேசசபைப் பங்குதாரர்கள், துறை சார் திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் கையளிப்பு

*(ஹஸ்பர் ஏ.எச்)*

*பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருமானத்தைப் பெற்றுத் தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கமானது நேற்று இரண்டு குடும்பங்களுக்கு உதவிகளை வழங்கிவைத்தது.*

*ன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான தையல் இயந்திரமும் மிளகாய்த் தூள் அரைக்கும் இயந்திரமும் இதன்போது கையளிக்கப்பட்டன.*

*திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் கதிரவேலு சண்முகம் குகதாசன் இவ்வுதவிகளை திருகோணமலையில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார்.*

*பெண்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கவும் அதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ளவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.*






# நடேஸ்வராக் கல்லூரியில் பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்கும் கல்விச் சுற்றுலா செல்லும் வாய்ப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயிலும் மிகவும் வசதி குறைந்த மாணவர்கள், தமது குடும்பப் பொருளாதாரக் கஷ்ட நிலை காரணமாக கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண பிரதேசத்திற்கு அப்பாலுள்ள நுவரேலியா போன்ற பகுதிகளுக்குந் சென்று இயற்கைக் காட்சிகளை காணக்கூடிய சந்தர்ப்பம் தமக்கும் கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பிற்கு அண்மையில் முடிவு கிடைத்தது.

இக்கல்லூரியில் கற்று லண்டனிலுள்ள பழைய மாணவர்கள் இம்மாணவர்களின் எதிர்பார்ப்பினை நிறைவு செய்யும் வகையில், மலையகச் சுற்றுலாவிற்கான முழுச் செலவையும் தாம் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

# மார்ச் 12 இயக்கத்தின் "மக்கள் மேடை" மே 29 இல்! அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஏற்பாடு

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் மார்ச் 12 இயக்கத்தின் "மக்கள் மேடை" நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைதீவில் நடைபெறவுள்ளது.

தூய்மையான அரசியலுக்காக செயல்படும் மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தலைமையில் இந்நிகழ்வு காரைதீவு பாபா றோயல்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கென மாவட்டத்தில் உள்ள அரசியல் பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். கிராம ரீதியாக மூவர் இந்நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

"நாம் எமது வாக்குகளை அறிவு பூர்வமாகப் பயன்படுத்த வேண்டும். தகுதியானவர்களை மாத்திரமே நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்ப வேண்டும். இதுவே எமது தலையான கடமையாகும்!" என்று மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

இது குறித்து இணைப்பாளர் சத்தியநாதன் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் ஒக்டோபர் 16 ஆம் திகதி சகல தேர்தல் அதிகாரங்களும் தேர்தல் ஆணையகத்திடம் செல்கின்றன. அதன்பின்பு நாடாளுமன்றமோ அல்லது ஜனாதிபதியோ தேர்தலில் தலையிடும் அதிகாரம் இருக்காது. எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தியே ஆக வேண்டும். எனவே மக்கள் விழிப்படைய வேண்டும்.

நிதியின்மை போன்ற காரணங்களைக் காட்டி உள்ளூராட்சித் தேர்தல் பின்போடப்பட்டது. இருந்தபோதிலும் எதிர்வரும் ஒக்டோபரில் தேர்தல் நடத்தியாக வேண்டும் .




மார்ச் 12 இயக்கத்தின் குறிக்கோளின் படி எட்டு தகுதிகள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வேட்பாளருக்கு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த எட்டுத் தகுதிகளும் இருக்கின்றவர்களுக்குத்தான் வேட்புமனுத் தாக்கல் செய்ய அனுமதி அளிக்க வேண்டும். அனைத்துக் கட்சிகளும் அதையே பின்பற்ற வேண்டும்.

தரமான பிரதிநிதியை தெரிவு செய்கின்ற உரிமை மக்களுக்கு இருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் எடுக்கின்ற முடிவு அடிப்படையில் நாட்டின் கிராமத்தின் மற்றும் உங்களது நகரத்தின் எதிர்காலமும் உங்களது பிள்ளைகளின் எதிர்காலமும் தங்கி உள்ளது, என்றார்



# மெக்சிகோவில் ஜனாதிபதித் தேர்தல் பிரசார மேடை சரிந்து விழுந்ததில் 9 பேர் மரணம் – 50 பேர் காயம்!

மெக்சிகோவில் நடைபெறவிருந்த ஜனாதிபதி வேட்பாளரின் பிரசாரக் கூட்டத்தில், மேடை சரிந்து விழுந்ததில் 9 பேர் உயிரிழந்துடன் 50 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

அந்நாட்டின் வடக்கு மாகாணமான, நியூவோ லியோன் மாநிலத்தில், ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் ஜோர்ஜ் அல்வாரெஸ் மைனெஸ் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று வீசிய பலத்த காற்று காரணமாக இவ்வாறு மேடை சரிந்து விழுந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

மெக்சிகோவில் எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அங்கு விறுவிறுப்பாக பிரசாரக் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையிலேயே, குடிமக்கள் இயக்கம் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் ஜோர்ஜ் அல்வாரெஸ் மைனெஸின் பிரசார நிகழ்ச்சிக்காக அமைக்கப்பட்டிருந்த மேடை அமைப்புகள் சரிந்து விழுந்துள்ளன.

இது தொடர்பாக வேட்பாளர் ஜோர்ஜ் அல்வாரெஸ் மைனெஸ் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் உள்ளூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், விபத்தில் தனது குழு உறுப்பினர்களும் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மெக்சிகோ ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் ஜோர்ஜ் அல்வாரெஸ் மைனெஸ் தற்போது மூன்றாவது இடத்தில் உள்ளார்.

ஆளும் கட்சி வேட்பாளர் கிளாடியா ஷீன்பாம், எதிர்க்கட்சிக் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்தும் சோச்சிட்ல் கால்வேஸ் ஆகியோர் முறையே போட்டியில் முதல் இரண்டு இடங்களை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (04)



# 70 மில்லியன் ரூபா நிதி மோசடி தொடர்பில் பிரபல வர்த்தகர் கைது

நிதி மோசடி தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு முன்னிலைப்படுத்தப்பட்ட 'அவுரா லங்கா' நிறுவனத்தின் தலைவர் விரஞ்சித் தம்புகலவை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பவித்ரா பத்திராஜ நேற்று (22) உத்தரவிட்டார்.

70 மில்லியன் ஷரூபா நிதி மோசடி தொடர்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான விசாரணைகள் நிறைவடையவில்லை எனவும் குற்றப் புலனாய்வு திணைக்களம் வழங்கிய தகவலை பரிசீலித்த மேலதிக நீதவான், பிரதிவாதியின் பிணை கோரிக்கையை நிராகரித்து இந்த உத்தரவை பிறப்பித்தார்.

விரஞ்சித் தடுகல, எல்.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இடம்பெற்றுள்ள தம்புள்ளை அணியின் முன்னாள் உரிமையாளரும் ஆவார். குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விரஞ்சித் தடுகல நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரெம-87)

# மூன்றாவது தேசிய வைத்தியசாலையாக கராபிட்டிய

கராபிட்டிய போதனா வைத்தியசாலையை நாட்டின் மூன்றாவது தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் தற்போது இடம்பெற்று வரும் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் வைத்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன இதனை தெரிவித்தார்.

தற்போது இலங்கையில் அபிவிருத்தியடைந்த தேசிய வைத்தியசாலைகளாக கொழும்பு மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலைகள் மட்டுமே உள்ளன.

இதன்படி கராபிட்டிய போதனா வைத்திய சாலையை தேசிய வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது வைத்தியர்கள், தாதியர்கள் போன்றவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் கராபிட்டிய வைத்தியசாலை சுகாதார துறைக்கு அதிகளவு பங்களிப்புச் செய்வதாக தெரிவித்த அமைச்சர், ருஹூனு பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பயிற்சியை வழங்கும் வைத்தியசாலையாக வருடாந்தம் 1000 இற்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்கள் பயிற்சி பெறுவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, பொத்துவில் ஆதார வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தினால் அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகும் அமைச்சர் தெரிவித்தார். (04)

# கல்முனை நகர் ஒரு வழிப் பாதை இரு வழிப் பாதையாகத் திறப்பு

(சர்ஜூன் லாபீர்)

கல்முன நகர் வர்த்தகர்கள், திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் இடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கல்முனை நகர் பிரதேசத்தில் உள்ள ஒரு வழிப் பாதை இரு வழிப் பாதையாக இன்று உத்தியோகபூர்வமாக திறக்கப்பட்டது.

இந்நிகழ்வு கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர் தலைமையில், கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி.எம். எல். புத்திகவின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம பிரதம அதிதியாக கலந்து கொண்டு இரு வழிப்பாதையை திறந்து வைத்தார்.

இன்று முதல் குறித்த ஒரு வழிப் பாதை (டமாஸ் ஜூவலரி சந்தியில் இருந்து கொமர்சல் வங்கி வரையான ஒரு வழிப்பாதை) இரு வழியாக மாற்றப்பட்டு பொதுப்போக்குவரத்திற்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை பிரதி ஆணையாளர் ஏ.எச்.அசீம், கல்முனை மாநகர பொறியியலாளர் ஜௌஸி அப்துல் ஜப்பார், நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ.பாவா, ஆலோசகர் எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



## சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு தளபாடங்களும் மருத்துவ உபகரணங்களும்



(எம்.எம்.ஜெஸ்மின்)

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு மிக அவசியத் தேவையாகக் காணப்பட்ட மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்களை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் வழங்கி வைத்தார்.

அண்மையில் அவ்வைத்தியசாலைக்கு விஜயம் செய்த பிராந்தியப் பணிப்பாளர் வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடியதுடன் அங்கு நிலவும் தேவைகள், குறைபாடுகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அதனைத்தொடர்ந்து பிராந்தியப்பணிப்பாளர், பதில் வைத்திய அத்தியட்சகரும் மகப்பேற்று வைத்திய நிபுணருமான டொக்டர் எல்.சி.ஆர். றொஹானிடம் மருத்துவ உபகரணங்கள் மற்றும் அலுவலகத் தளபாடங்களையும் கையளித்துள்ளார்.

இந்நிகழ்வில் சத்திர சிகிச்சை நிபுணர் என். அகிலன், பிராந்திய பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.ஷாபி, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.நியாஸ் அஹமட், வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் தலைவர் டொக்டர் ஏ.இஸ்ஸடீன் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

## மருதமுனை பிரீமியர் லீக் சம்பியன் வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு



(மருதமுனைச் செய்தியாளர்)

மருதமுனை பிரீமியர் லீக் கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கான சம்பியன் வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது.

எம்.பி.எல் நிறைவேற்று குழு தவிசாளர் முஸம்மில் நுஸைர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் எம்.என்.இஸட். றூமி பிரதம அதிதியாக கலந்து கொண்டு சம்பியன் வெற்றி கிண்ணத்தை எம்.பி.எல் நிறைவேற்று குழு தவிசாளரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் சாம்பியன் வெற்றி கிண்ணத்துடன் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ளும் அணிகளின் தலைவர்கள் கைகோர்த்துக் கொண்டதுடன் பிரீமியர் லீக் நிறைவேற்றுப் பணிப்பாளர் சபை உறுப்பினரும் ஊடகவியலாளர்களுமான ஏ.எல்.எம்.ஷினாஸ், றாஸிக் நபாயில் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.




## மருதமுனை ஷம்ஸ் மத்திய கல்லூரி தேசியமட்ட கடற்படைப் போட்டியில்!



(எம்.எம்.றம்ஸீன்)

38 வது மாணவ சிப்பாய்ப் படைப்பிரிவில் இடம்பெற்ற மாகாண மட்ட சிரேஷ்ட கடற்படைத் தெரிவுப் போட்டியில், கல்முனைக் கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனை, ஷம்ஸ் மத்திய கல்லூரி நான்காம் இடத்தைப் பெற்றது.

இதன்மூலம்தேசிய சிரேஷ்ட கடற்படைப் போட்டிக்கு ஷம்ஸ் மத்திய கல்லூரி அணியினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# ஆரோக்கியமான சமூகம் என்பது உடல் மற்றும் உள ஆரோக்கியமே!

## சம்மாந்துறை பிரதேச செயலாளர்




(சர்ஜ/ன் லாபீர்)

ஆரோக்கியமான சமூகம் என்பது உடல் மற்றும் உள ஆரோக்கியம் சார்ந்ததாக இருக்க வேண்டும். என சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

உளச்சமூகப் பிரச்சினைகளை குறைப்பதற்கான உளவியல் உளவளத்துனை செயலமர்வு நேற்று (22) சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பெண்கள் சார்ந்த சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் -

உடலளவில் நாங்கள் ஆரோக்கியமாக வாழ்கின்றோம். அதிலும் தொற்று நோய், தொற்றா நோய் என இரு வகை இருந்தாலும் பார்வையில் நாம் சந்தோசமாகவும், ஆரோக்கியமாகவும் இருப்பது போல எல்லோருக்கும் காண்பிக்கின்றோம். ஆனால், உள்ளத்திற்குள் இருக்கின்ற பிரச்சினைகளை மறைத்துக் கொண்டு வாழ்வதனால்தான் நாம் அதிகமான தொற்றா நோய்களுக்கு உள்ளாகின்றோம்.

உள்ளத்திற்குள் நிறைய கவலைகளையும், கஷ்டங்களையும் மறைத்துக்கொண்டு அதிகமான யோசனைகளோடு வாழ்கின்றமைதான் உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, மனநலப் பாதிப்பு போன்ற பல நோய்கள் வருவதற்கு காரணமாக அமைகின்றது.

முறையான உணவுப் பழக்க வழக்கங்கள், முறையான வாழ்க்கை முறைகள் நம்மில் இல்லாததனால் நாம் நோய்களை தேடிக் கொள்கின்றோம். இதற்காக அரசாங்கம் சுகாதார துறைக்கு அதிகளவிலான தொகையை செய்கின்றது. அதேபோன்று எமது தனி நபர் வருமானத்திலும் அதிகமான தொகை ஆரோக்கியத்திற்காக செலவு செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இது பொருளாதார ரீதியாக பல சிக்கல்களை ஏற்படுத்துவதோடு, சுகாதார சீர்கேடுகளையும் இந்த உளப் பாதிப்புக்கள் எமக்கு ஏற்படுத்துகின்றன. எனவே இவற்றை நாம் அடையாளம் காண வேண்டும்.

குறிப்பாக, ஒவ்வொருவரும் தங்களிடையே காணப்படுகின்ற பிரச்சினைகளை முதலில் இணங்கான வேண்டும். அதுபோல் சமூக மட்டப் பிரதிநிதிகள், தலைவர்கள் குறித்த பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளை இணங்கண்டு அவற்குக்கான தகுந்த தீர்வுகளை வழங்குவதற்கு முன்வரவேண்டும்.

உளவளம் சார்ந்த பிரச்சினைகளை சமூக மட்ட தலைவர்கள், பிரதி நிதிகள் முறையாக அனுகி அதனை குறுகிய, நீண்ட கால அடிப்படையில் தீர்ப்பதற்கான வழிமுறைகளை அறிந்து இருக்க வேண்டும்.

உள வள ஆலோசனைகளை சமூக மட்டத்திற்கு கொண்டு சென்று, உள நோய்களை குறைத்து, சமூக மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்திற்கும் ஒத்துழைப்பு வழங்குவது சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளின் கடமையாகும், எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கணக்காளர் எஸ்.எல்.சர்தார் மிர்ஸா, நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ்.எல்.ஐ கபீர், அம்பறை மாவட்ட உளவள ஆலோசகர் மனுஸ் அபூபக்கர், சமூக சேவைப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



## வடமேல் மாகாண பல்கலைக்கழக கல்விமாணி பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்க ஆளுநர் உறுதி

(எம்.எம்.ஜெஸ்மின்)

வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட், மாகாணத்தில் வசிக்கும் பல்கலைக்கழக கல்விமாணி பட்டதாரிகளுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தார்.

வடமேல் மாகாண ஆளுனர் அலுவலகத்தில் நடைபெற்ற குறித்த சந்திப்பில், கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகங்களில் கல்விமாணிப் பட்டப் படிப்பை நிறைவுசெய்துள்ள 24 பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தில் கல்விமாணிப் பட்டம் பெற்றுள்ள தங்களுக்கு அரசாங்கத்தின் பட்டதாரி நியமனங்களின்போது இழைக்கப்படும் அநீதிகள் குறித்து அதன்போது அவர்கள் ஆளுநரிடம் தங்கள் தரப்பு முறைப்பாடுகளை முன்வைத்தனர்.

அவர்களின் குறைகளைக் கரிசனையுடன் கேட்டறிந்த ஆளுநர் நஸீர் அஹமட், வடமேல் மாகாணத்தில் அரச நியமனங்கள் அல்லது ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்போது கல்வி மாணிப் பட்டம் பெற்றுள்ள பட்டதாரிகளையும் உள்ளடக்கி, நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.









# திருகோணமலை விபத்தில் வடமராட்சி சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், வடமராட்சியைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவரின் குடும்பம் பயணித்த கார், திருகோணமலையில் விபதுக்குள்ளானதில் 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார். அந்தச் சிறு மியின் சகோதரனான 4 வயதுடைய சிறுவன் படுகாயமடைந்துள்ளார்.

திருகோணமலை - ஈச்சிலம்பற்று, வட்டவன் பகுதியில் இன்று அதிகாலை 2.30 மணியளவில் இந்தக் கோர இடம் பெற்றுள்ளது என்று ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி - அல்வாய் மேற்கு, திக்கம் பகுதியைச் சேர்ந்த டயலொக் நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு பிராந்தியப் பொறியியலாளர் சிவயோகநாதன் நிதர்சன் (வயது 35), அவரது மனைவியான வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் நிதர்சன் தர்சினி (வயது 35) ஆகிய இருவரும் தமது இரண்டு பிள்ளைகளுடன் காரில் யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வேளை, திருகோணமலை – ஈச்சிலம்பற்று, வட்டவன் பகுதியில் கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து – வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தக் கோர விபத்தில் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தரம் 1 இல் கல்வி பயிலும் மாணவியான நிதர்சன் அதிதி (வயது 6) சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சிறுமியின் சடலம் மூதூர் தள வைத் தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

அவரது சகோதரனான நிதர்சன் அதிரேஷ் (வயது 4) என்ற சிறுவன் படுகாயமடைந்த நிலையில் மூதூர் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து இடம்பெற்றபோது சிறுமி யும், சிறுவனும் காரின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணித்துள்ளனர்.

அதேவேளை, காரைச்செலுத்திச்சென்ற தந்தையும், முன் ஆசனத்தில் அமர்ந்திருந்து பயணித்த தாயும் சிறுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஈச்சிலம்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னடுத்துள்ளனர். (அ)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD
PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
இலகு முறையில்
கணக்கை பதிவு
செய்து உங்கள்
பயணத்தை
தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD
DRIVER APP:
GET IT ON Google Play
Download on the App Store
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
YOU CAN
EASILY
REGISTER
& ADD YOUR
VEHICLE
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!